**ஜூலை – 18**

# TNPSC துளிகள்

- மத்திய அரசானது, தமிழகத் தலைமைச் செயலாளர் எம். சாய் குமாருக்கு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 முதல் 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 வரை ஆறு மாத காலப் பணி நீட்டிப்பை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராகப் போராட 'தூஃபான் நடவடிக்கை' என்ற போதைப் பொருள் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் மூலம் ஒத்துழைப்பை வலுப்படுத்த கேரளாவும் தமிழ் நாடும் முடிவு செய்துள்ளன.
    - இப்பிரச்சாரம் எல்லைக் கண்காணிப்பு, உளவுத் தகவல் பகிர்வு மற்றும் போதைப் பொருள் கடத்தல் வலையமைப்புகளுக்கு எதிரான கூட்டு நடவடிக்கை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனமானது (CMFRI) தெற்கு கேரளாவின் அரபிக்கடல் பகுதியில் 'சைட்டோப்சிஸ் இண்டிகா' என்ற புதிய ஆழ்கடல் மீன் இனத்தைக் கண்டறிந்து உள்ளது.
    - இது பொதுவாக 'டோரிகள்' என்று அழைக்கப்படும் கடல் மீன்களின் 'சைட்டோப்சிஸ்' பேரினத்தைச் சேர்ந்தது மற்றும் இது 'இந்தியன் டோரி' என்று அழைக்கப்படுகிறது.
- டெல்லி தியாகராஜ் விளையாட்டு மையத்தில் 2026 ஆம் ஆண்டு ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 2 வரை நடைபெறவுள்ள 2026 ஆம் ஆண்டிற்கான 22-வது காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பின் அதிகாரப்பூர்வ சின்னமான 'மயூர்' (Mayur) அறிமுகப்படுத்தப் பட்டு உள்ளது.
- மணல் மற்றும் தூசிப் புயல்கள் (SDS) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு மூலம் அவற்றின் தாக்கங்களைக் குறைக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 12 அன்று சர்வதேச மணல் மற்றும் தூசிப் புயல்கள் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "From Source to Impact: Protecting Land and Life from Sand and Dust Storms" என்பதாகும்.
- பிரெஞ்சு புரட்சியின் தொடக்கத்தைக் குறித்த, 1789 ஆம் ஆண்டில் பாரிஸில் உள்ள பாஸ்டில் சிறைச்சாலை தகர்க்கப்பட்டதை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 14 அன்று பிரான்சின் தேசிய தினமாக பாஸ்டில் தினம் கொண்டாடப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Strategic Awakening" என்பதாகும்.
- உலகெங்கிலும் உள்ள மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கவும், பாதுகாப்பான மற்றும் நெறிமுறை சார்ந்த மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 15 அன்று உலக மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Changing lives with Plastic and Reconstructive Surgery" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## திருநங்கைகளுக்கான கிடைமட்ட இடஒதுக்கீடு


- குடிமைப் பணிகள் மற்றும் அரசு வேலைகளில் திருநங்கைகளுக்கு 1% அல்லது 2% கிடைமட்ட இடஒதுக்கீடு வழங்கப்படுமா என்பதைத் தெளிவுபடுத்துமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இதற்குப் பதிலளிக்க மாநில அரசுக்கு 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 வரை நீதிமன்றம்

அவகாசம் வழங்கியுள்ளது.

- அனைத்து குடிமைப் பணிகள் மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் திருநங்கைகளுக்கு கர்நாடகா 1% கிடைமட்ட இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியதை அடுத்து இந்த விஷயம் எழுப்பப் பட்டது.
- கிடைமட்ட இடஒதுக்கீடு என்பது அனைத்து சமூகப் பிரிவுகளையும் கடந்து, பெண்கள், மாற்றுத் திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் திருநங்கைகள் போன்ற சிறப்புப் பிரிவினருக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதாகும்.

**அரசு வேலைவாய்ப்புகளில் மூன்றாம் பாலினத்தவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கக் கோரிய வழக்கில், ஆகஸ்ட் 4-ஆம் தேதிக்குள் பதிலளிக்குமாறு தமிழக அரசுக்குச் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மூன்றாம் பாலினத்தவருக்குத் தனி இட ஒதுக்கீடு தர வேண்டும் என்ற தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்திருந்தது. இந்த விசாரணையின் போது, கர்நாடகாவில் மூன்றாம் பாலினத்தவருக்கு ஒரு சதவீத தனி இட ஒதுக்கீடு வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, தமிழகத்திலும் ஒரு சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

## 950 கூடுதல் எம்பிபிஎஸ் இடங்கள்





- தமிழ்நாடு 2026-27 கல்வி ஆண்டிற்கான 950 எம்பிபிஎஸ் இடங்களைச் சேர்க்கவுள்ளது,
- இதன் மூலம் மாநிலத்தில் உள்ள 78 மருத்துவக் கல்லூரிகளில் மொத்த இடங்களின் எண்ணிக்கை 13,999 ஆக உயரும்.
- கர்நாடகா (15,395) மற்றும் உத்தரப்பிரதேசம் (14,000) ஆகிய மாநிலங்களுக்கு அடுத்த படியாக இந்தியாவில் மூன்றாவது அதிக எம்பிபிஎஸ் இடங்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.
- இந்த கூடுதல் இடங்களுக்குத் தேசிய மருத்துவ ஆணையம் (NMC) 13 மருத்துவக் கல்லூரிகளில் (3 அரசு மற்றும் 10 தனியார்) அனுமதி அளித்துள்ளது.
- தமிழ்நாட்டின் 36 அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த எம்பிபிஎஸ் இடங்களின் எண்ணிக்கை 5,200 ஆக உயர்ந்துள்ளது.

- நாமக்கல், திருப்பூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 100லிருந்து 150 ஆக இடங்களை உயர்த்த மருத்துவ மதிப்பீடு மற்றும் தரவரிசை வாரியம் (MARB) ஒப்புதல் அளித்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் முதல் சேவை உற்பத்தி குறியீடு சோதனை




- முறையான சேவைத் துறையின் மாதாந்திர செயல்பாடுகளை அளவிடுவதற்காக, வேண்டி புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) இந்தியாவின் முதல் சோதனைமுறை சேவை உற்பத்தி குறியீட்டை (ISP) வெளியிட்டுள்ளது.
- முதல் ISP ஆனது 2024-25-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு 19 துணைத் துறைகளை உள்ளடக்கியது மற்றும் இது இந்தியாவின் சேவைத் துறையில் சுமார் 60%-ஐப் பிரதிபலிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 14 துணைத் துறைகள் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன என்பதோடு இது சேவைத் துறையின் வலுவான செயல் திறனைக் காட்டுகிறது.
- இந்தக் குறியீடு, சேவை உற்பத்தி குறியீட்டிற்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் (TAC-ISP) வழிகாட்டுதலின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இந்தியாவின் சேவைப் பொருளாதாரத்தில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களைக் கண்காணிக்கவும் மற்றும் மேக்ரோ பொருளாதாரக் குறிகாட்டிகளை வலுப்படுத்தவும் ISP மாதாந்திர அடிப்படையில் வெளியிடப்படும்.

## இந்தியாவின் கோடெக்ஸ் நறுமணப் பொருட்கள் தரநிலைகள்

- ஜெனீவாவில் நடைபெற்ற கோடெக்ஸ் அலிமெண்டேரியஸ் ஆணையத்தின் 49வது

கூட்டத் தொடரில் (CAC49) ஏலக்காய் (பெரிய ஏலக்காய்), கொத்தமல்லி மற்றும் வெண்ணிலா ஆகியவற்றுக்கான மூன்று கோடெக்ஸ் தரநிலைகளை இந்தியா வெற்றிகரமாக ஏற்றுக் கொண்டது.

- நறுமணப் பொருட்களுக்கான உலகளாவிய தரக் குறியீடுகளை அமைப்பதற்காக, இந்தியா நடத்தும் நறுமணப் பொருட்கள் மற்றும் சமையல் மூலிகைகளுக்கான கோடெக்ஸ் குழு (CCSCH) மூலம் இந்தத் தரநிலைகள் உருவாக்கப்பட்டன.
- புதிய தரநிலைகள் சந்தை அணுகலை மேம்படுத்துவதையும், சர்வதேச வர்த்தகத்தை எளிதாக்குவதையும் மற்றும் இந்தியாவின் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதிப் போட்டித்தன்மையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- கோடெக்ஸ் அலிமெண்டேரியஸ் ஆணையத்தின் கீழ் புதிய உணவுப் பொருட்களுக்கான இடர் பகுப்பாய்வு குறித்த மின்னணு பணிக்குழுவின் (EWG) இணைத் தலைவராக இந்தியாவும் நியமிக்கப்பட்டது.
- கோடெக்ஸ் அலிமெண்டேரியஸ் ஆணையம் என்பது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியவற்றின் கூட்டு உணவுத் தரநிலைகள் அமைப்பாகும்.





# சர்வதேசச் செய்திகள்

## BTUF உச்சி மாநாடு 2026 - ஹைதராபாத் பிரகடனம்

- 2026 ஆம் ஆண்டிற்கான 15-வது பிரிக்ஸ் தொழிற்சங்க கூட்டமைப்பு (BTUF) உச்சி மாநாடானது ஹைதராபாத் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதுடன் ஹைதராபாத்தில் நிறைவடைந்தது.
- இப்பிரகடனம் தொழிலாளர்களின் உரிமைகள், உலகளாவிய சமூகப் பாதுகாப்பு, உள்ளடக்கிய வளர்ச்சி, சமூக உரையாடல் மற்றும் நிலையான மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- இந்தக் கூட்டமைப்பு தொழிலாளர் இயக்கம், திறன்களின் பரஸ்பர அங்கீகாரம் மற்றும் பிரிக்ஸ் நாடுகளிடையே வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல் குறித்து விவாதித்தது.
- இது உலகப் பொருளாதாரத்தில் நியாயமான ஊதியம், பாதுகாப்பான வேலைச் சூழல்


மற்றும் உழைப்பின் கண்ணியம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது.

- வலுவான தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க அரசாங்கங்கள், முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை இந்த உச்சி மாநாடு வலியுறுத்தியது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கடல்வழி ஏவுகல உந்துகலன் மீட்பு அமைப்பு





- Long March 10B ஏவுகலத்தைப் பயன்படுத்தி, கடல்வழி மறுபயன்பாட்டு ஏவுகல உந்து கலன் மீட்பு அமைப்பை சீனா வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.
- நிலை பிரிப்பிற்குப் பிறகு, உந்துகலன் செங்குத்தாகத் திரும்பி, வலை அடிப்படையில் ஆன தரையிறங்கும் அமைப்பைப் பயன்படுத்தி கடலோரத் தளத்தில் மீட்கப் பட்டது.
- இது சுற்றுப்பாதை அளவிலான ஏவுகல உந்துகலனை சீனா வெற்றிகரமாக மீட்ட முதல் நிகழ்வாகும்.
- சீன ஏவு வாகனத் தொழில்நுட்பக் கழகம் (CALT) உருவாக்கியுள்ள இந்த Long March 10B ஏவுகலம், 16 டன்களுக்கும் அதிகமான சுமைகளை தாழ்வான புவி சுற்றுப்பாதைக்கு (LEO) கொண்டு செல்லும் திறன் கொண்டது.

- மறுபயன்பாட்டு ஏவுகலத் தொழில்நுட்பமானது, ஏவுதல் செலவுகளைக் குறைப்பதையும், சீனாவின் எதிர்கால வணிக ரீதியான செயற்கைக்கோள் மற்றும் நிலவுப் பயணங்களுக்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் மதிப்பீடு

- தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் உள்ள பிச்சாவரம் சதுப்புநிலக் காட்டின் சுற்றுச் சூழல் அமைப்பு சேவைகளின் மதிப்பு ₹2,485.38 கோடியாக மதிப்பிடப் பட்டு உள்ளது.
- இந்த மதிப்பீடானது கார்பன் சேமிப்பு, மீன்வள ஆதரவு, சுற்றுலா, கடலோரப் பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் உள்ளூர் வாழ்வாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- பிச்சாவரம் இந்தியாவின் மிகப்பெரிய சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒன்றாகும் என்பதுடன் இது ஈரநிலங்கள் குறித்த ராம்சார் மாநாட்டின் (1971) கீழ் ராம்சார் தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆய்வானது, தாவரங்கள் மற்றும் மண்ணில் உள்ள கார்பன் உட்பட, இதன் நீல கார்பன் மதிப்பை (கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளால் சேமிக்கப்படும் கார்பன்) சுமார் ₹1,612 கோடியாக மதிப்பிட்டுள்ளது.
- சதுப்புநிலங்கள் என்பவை கடலோர மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் காணப்படும் உப்பைத் தாங்கி வளரும் (halophytic) தாவரங்களான இவை கடலோரப் பகுதிகளை மண் அரிப்பு மற்றும் புயல்களிலிருந்து பாதுகாக்க உதவுகின்றன.





## சாம்பல் நிற இருவாச்சிப் பறவைகள் பாதுகாப்பு

- இந்திய சாம்பல் நிற இருவாச்சி (ஓசிசெரோஸ் பைரோஸ்ட்ரிஸ்) 60 ஆண்டுகளுக்கும் மேலாக குஜராத்தின் கிர் காடுகளுக்குத் திரும்பி, தொடர்ந்து நான்காவது ஆண்டாக வெற்றிகரமாக இனப்பெருக்கம் செய்துள்ளது.
- இந்த இனம் IUCN (பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம்) செந்நிறப் பட்டியலில் 'தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இதன் மறு அறிமுகத் திட்டம் 2021 ஆம் ஆண்டில் தொடங்கியதுடன் அப்போது குஜராத்தின் ஆரவல்லி காடுகளில் உள்ள ஆரோக்கியமான இருவாச்சி பறவைகளின் கூட்டத்தில் இருந்து 40 பறவைகள் கிர் காடுகளில் விடுவிக்கப்பட்டன.
- அவற்றின் உயிர்வாழ்வு, வாழ்விடப் பயன்பாடு, நகர்வு மற்றும் இனப்பெருக்க நடத்தை

ஆகியவற்றைக் கண்காணிக்க செயற்கைக்கோள் கண்காணிப்பு தொழில்நுட்பம் பயன்படுத்தப் பட்டது.

❖ இருவாச்சிப் பறவைகள் வறண்ட கலப்பு இலையுதிர் மற்றும் தேக்குக் காடுகளை விரும்புகின்றன என்பதுடன் மேலும், இவை விதை பரவல் மற்றும் காடு மீளுருவாக்கம் ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.




## ஆல்பைன் மலர் - சயானந்தஸ் ஹூக்கேரி





❖ 'சயானந்தஸ் ஹூக்கேரி' என்ற அரிய வகை ஆல்பைன் மலர் அருணாச்சலப் பிரதேசத்தில் 158 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- இது தவாங் மாவட்டத்தில் உள்ள மாகோ கிராமத்திற்கு அருகிலுள்ள சுனா பள்ளத் தாக்கில் சுமார் 3,600 மீட்டர் உயரத்தில் கண்டறியப்பட்டது.
- இத்தாவரம் காம்பானுலேசி (மணி வடிவ மலர்) குடும்பத்தைச் சேர்ந்தது மற்றும் இது அதிக உயரமுள்ள இமயமலைப் பகுதிகளில் காணப்படுகிறது.
- 1867 ஆம் ஆண்டில் சிக்கிமில் பிரிட்டிஷ் தாவரவியலாளர் சர் ஜோசப் டால்டன் ஹூக்கர் என்பவரால் இந்த இனம் இந்தியாவில் முதல்முறையாக அதிகாரப் பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது.
- காடுகளில் இதன் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால், இதனை 'அருகிவரும் இனம்' என வகைப்படுத்த இந்தியத் தாவரவியல் ஆய்வு மையம் (BSI) பரிந்துரைத்து உள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## சர்வதேச நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டப் புதுப்பிப்பு




- சர்வதேச நாணய நிதியம் (IMF) 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் (WEO) புதுப்பிக்கப்பட்ட அறிக்கையை "Global Economy in Crosscurrents of War and Technology" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கை உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை 2026 ஆம் ஆண்டில் 3.0% ஆகவும், 2027 ஆம் ஆண்டில் 3.4% ஆகவும் கணித்துள்ளது. மேலும், புவிசார் அரசியல் பதற்றங்களால் வளர்ச்சி பாதிக்கப்படும் அதே வேளையில், தொழில்நுட்பம் சார்ந்த முதலீடுகள் அதற்கு ஆதரவாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.
- உலகப் பொருளாதாரத்தை வடிவமைக்கும் இரண்டு முக்கிய சக்திகளாக, மத்திய கிழக்கு மோதலின் தாக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தொழில்நுட்ப முதலீடுகளால் உந்தப்படும் வளர்ச்சி ஆகியவற்றை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.
- எரிசக்தி விலை அழுத்தங்கள் காரணமாக 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பண வீக்கக் கணிப்பை 4.7% ஆக IMF திருத்தியுள்ளதால், உலகளாவிய பணவீக்கம் தொடர்ந்து ஒரு கவலையாகவே இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- வலுவான உள்நாட்டுத் தேவையால் ஆதரிக்கப்பட்டு, 2026-27 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி சுமார் 6.4% ஆகக் கணிக்கப்

பட்டுள்ளதுடன் இதன்மூலம் அதிவேகமாக வளரும் முக்கியப் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா தொடர்ந்து இருக்கும் என்று கணிக்கப் பட்டு உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## நான்கு புதிய புவிசார் குறியீடுகள் - ஜார்க்கண்ட்

- 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பகையா பட்டு, குச்சாய் பட்டு, முண்டா நகைகள் மற்றும் ஜார்க்கண்ட் மூங்கில் கைவினைப்பொருட்கள் ஆகிய நான்கு பாரம்பரியப் பொருட்களுக்கு ஜார்க்கண்ட் மாநிலம் புவிசார் குறியீடுகளைப் பெற்றுள்ளது.
- பொருட்கள் புவிசார் குறியீடு (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999-இன் கீழ் தனித்துவமான புவியியல் தோற்றம் மற்றும் பண்புகளைக் கொண்ட பொருட்களுக்குப் புவிசார் குறியீடானது அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பை வழங்குகிறது.
- பகையா பட்டு என்பது கோடா மாவட்டத்தைச் சேர்ந்த காட்டு டஸ்ஸர் வகைப் பட்டாகும், குச்சாய் பட்டு என்பது செரைகேலா-கர்சவான் மாவட்டத்தைச் சேர்ந்த காடுகளை அடிப்படையாகக் கொண்ட டஸ்ஸர் பட்டாகும்.
- முண்டா நகைகள் என்பது முண்டா பழங்குடி சமூகத்தின் பாரம்பரியக் கைவினைப் பொருளாகும் மற்றும் ஜார்க்கண்ட் மூங்கில் கைவினைப் பொருட்கள் சோட்டா நாக்பூர் பீடபூமி பகுதியில் கிடைக்கும் மூங்கிலைப் பயன்படுத்துகின்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★